**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 115/2022**

02.12.2025.

## PW- 2

**வா.சா. 2 மலர்கொடி க/பெ. ராஜேந்திரன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்திற்காக தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. வாதிக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாதி பணம் கொடுத்து தான் கிரயம் வாங்கினார் என்பது பத்திரத்தில் உள்ளது என்றால் சசிகுமார் தான் வெளிநாட்டிலிருந்து பணம் கொடுத்து வாதி 1ம் பிரதிவாதி பெயருக்கு வாங்கினார். ஆனால் பத்திரத்தில் அவ்வாறு இல்லை. 1ம் பிரதிவாதி தான் வாங்கியில் கடன் வாங்கினார் என்றாலும் அவர் தான் MOD எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கடன் வாங்கியதாலும் அவர் தான் MOD எழுதிக்கொடுத்ததாகவும் பத்திரங்களை ஒப்படைப்பதாக இருந்தால் 1ம் பிரதிவாதியிடம் தான் வங்கி ஒப்படைக்கும் என்றால் சரியல்ல. வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்குமிடைய குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு அவசியமற்ற நபர் என்றாலும் அவரை இந்த வழக்கிலிருந்து நீக்கவேண்டும் என்றாலும் சரியல்ல. வழக்கு பரிகாரம் எனக்கு தெரியாது என்றாலும் பெய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.